இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புகள், பொழிப்புக்களை உள்ளடக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் 2024 *திசெம்பர்* 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் *இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு* இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2 இன் 29 ஆம் பந்தியின் படி நேரடி முறையைப் பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகையில் மிகையுடன் தேறிய காசுப்பாய்ச்சல் ஒப்பிடப்பட்டு வெளியிட வேண்டிய	2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கையில் இந்தத் தவறு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

	போதிலும் அதிகாரசபையால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 80(அ) மற்றும் 81 ஆம் பந்திகளுக்கு மாறாக 2024 ஆம் ஆண்டின் போது ஏலவிற்பனையிடப்பட்ட ரூபா 3,129,555 கிரயமான வாகனமும் 13 மோட்டார் சைக்கிள்களுக்கு உரித்தாக அவற்றின் கிரயமும் அவற்றிற்கு உரிய திரண்ட பெறுமானத்தேய்வின் அளவும் குறித்த கணக்குகளில் இருந்து அகற்றப்படாது வாகன ஏலவிற்பனை செய்யப்பட்டமையால் பெறப்பட்ட ரூபா 890,621 தொகையான பணம் அதிகாரசபையின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	விற்கப்பட்ட வாகனங்களுக்கு சீராக்கங்களை செய்கையில் மூன்று வாகனங்களின் கிரயத்தை அடையாளம் காண முடியவில்லை, அதன்படி, எதிர்காலத்தில் அம் மூன்று வாகனங்களுக்கும் சீராக்கங்கள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய வாகனங்கள் தொடர்பான சீராக்கங்கள் 2025 ஆம் ஆண்டின் JRL/002/25 ஆம் இலக்க நாட்குறிப்புக் குறிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் தக்கவைக்கப்பட்ட பணத்தை விடுவிக்கப்படுவதற்காக அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 8,150,845 தொகை, இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் 49 ஆம் பந்தியின் படி வருவாயாக அங்கீகரிக்கப்பட்டிராமையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் அந்தத் தொகையால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது.	கணக்காய்வில் சுட்டிக்காட்டிய படி, தக்க வைக்கப்பட்ட பணத்தை விடுவிப்பதற்காக வழங்கப்பட்ட கட்டுநிதி, வருவாயாக அடையாளம் காணப்படின் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட பெறவேண்டிய கணக்கு மீதி தீர்க்கப்படாது முன்கொண்டு செல்லப்படும். இந்தப் பிரச்சினையை மேலும் ஆய்வு செய்து சீராக்கப்பட வேண்டியிருப்பின், 2025 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மூலம் சீராக்கப்படும்.	நிதிக்கூற்றுக்களில் வருவாய் சரியாக இனங்காணப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் அதிகாரசபையால் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டு மாணியங்கள் ரூபா 65,768,991 ஆகும். இவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 95 பந்தியின் ஏற்பாடுகளின் படி வருமானமாக அங்கீகரிக்கப்படாது செயற்திட்டக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தன. அந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மீளாய்வாண்டில் ஏற்கப்பட்ட ரூபா 51,233,815 ஆன மொத்தச் செலவினமும், வருமான அறிக்கையில் சேர்க்கப்படாது செயற்திட்டக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தன.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2025 வருடாந்த கணக்குகளில் அதனைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி வருமானம் சரியாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும்.

(உ)	ஆதனங்கள், இயந்திர உபகரணங் களைக் கணக்குகள் எவ்வாறு பராமரித்தல் வேண்டும் என்பதை அதிகாரசபை வெளியிடவில்லை. மேலும் 2012 ஆம் ஆண்டில் இரண்டு காணிகள் மட்டுமே மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. 2024 ஆம் ஆண்டில் சில காணிகள் மதிப்பிடப்பட்டு அவற்றின் பெறுமதி நிதிநிலைமைக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் படி ஆதன, இயந்திர உபகரணங்களின் நியாயப் பெறுமதி கணக்கிடப்பட்டிராமையால் ரூபா 2,703,182,770 பெறுமதியான ஆதன, இயந்திர உபகரணங்களினதும் ரூபா 854,727,329 பெறுமதியான குஞ்சு பொரிப்பக சொத்துக்களினதும் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.	அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளும் கட்டிடங்களும் மீள மதிப்பிடப்படுவதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.	அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளும் கட்டிடங்களும் மதிப்பிடப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	அதிகாரசபையால் இனப்பெருக்கத்திற்கு பயன்படுத்த முடியாத தாய் மீன்களை விற்கும் சாதாரண சந்தை விலையின் அடிப்படையில் இனப்பெருக்கத்திற்கு பயன்படுத்தக்கூடிய தாய் மீன்களின் இருப்பும் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் இனப்பெருக்கத்திற்கு பயன்படுத்தக்கூடிய தாய் மீனின் சரியான மதிப்பு நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	உயிரியல் இருப்புகளைக் கணக்கிடுவதற்கான கொள்கையைத் தயாரிப்பது குறித்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் கலந்துரையாடப்பட்ட ஒரு விடயமாகும். அதன்படி, பகுதித் தலைவர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் உள்ளடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதன்படி, திலாப்பியா மீன் தொடர்பான அறிக்கை பெறப்பட்டுள்ளது. இந்த அறிக்கை இது வரையில் முகாமைத்துவத்தின் ஆய்வில் உள்ளது. மேலும், குறித்த அறிக்கை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அவதானிப்புகளின் அடிப்படையில் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு கொள்கை வகுக்கப்பட உள்ளது.	உயிருள்ள மீன்களை மதிப்பிடுவதற்கான ஒரு உயிரியல் வழிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

(ஆ)	ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவாசாய அமைப்பினால் (FAO) ரூபா 143 மில்லியன் செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்லின உவர் நீர் மீன் குஞ்சு பொரிக்கும் நிலையத்தை நிர்மாணித்து 2017 ஜூன் 29 ஆம் திகதி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. குறித்த சொத்துக்கள் ரூபா 155,450,000 ஆக அதிகாரசபையால் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது வரை கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ரூபா 155,450,000 பெறுமதி, மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பெறுமதி அல்ல. மேலும் குறித்த சொத்துக்கள் தொடர்பாக பொறியியல் பிரிவால் தயாரிக்கப்பட்ட உள்ளக அறிக்கையின் பெறுமதியே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அச் சொத்துக்கள் மதிப்பிடப்படுவதற்காக 2021 ஆம் ஆண்டில் பெறுமதியிடப்படுவதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்க விரும்புகிறேன்.	சரியான மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்று கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	புதுக்குடியிருப்பில் உள்ள ரூபா 75,880,829 பெறுமதியான இறால் குஞ்சு பொரிப்பகம், மீன்வளர்ப்பு அபிவிருத்தி மற்றும் தர மேம்பாட்டுத் திட்டத்தால் 2009 திசெம்பர் 30 ஆம் திகதி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டது. 2015 ஜூன் 22 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின படி, இந்த குஞ்சு பொரிப்பகத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 47,951,600 இற்கும், ஏனைய சொத்துக்கள் ரூபா 3,146,550 இற்கும் மதிப்பிடப்பட்டிருந்தன. இந்த சொத்துக்கள் எதுவும் இதுவரை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.	2012 திசெம்பர் 31 அன்று அதிகாரசபையிடம் இருந்த அனைத்து சொத்துக்களும் மதிப்பிடப்படுவதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும், அனைத்து மையங்களினதும் விரிவாக்க அலுவலகங்களினதும் மதிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையாலும், அவ் அறிக்கைகள் முழுமையடையாமை யாலும், அந்த அறிக்கைகளில் கொடுக்கப்பட்ட பெறுமதிகள் கணக்கிடப்படவில்லை. இச் சொத்துக்கள் மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளமையால், புதிய மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின் அதற்கேற்ப கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	சரியான மதிப்பிடப்பட்ட பெறுமதியைப் பெற்று கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	16 ஜூலை 2014 திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் படி, பட்டுலுஓயா மீன்வளர்ப்பு அலுவலகத்தின் காணி ரூபா 4,000,000 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறித்த காணி ரூபா 2,599,000 ஆகக் கணக்கிடப்பட்டிருந்தமையால் நடைமுறையற்ற சொத்துக்கள் ரூபா	அதிகாரசபையின் அனைத்து காணிகளும் மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன, மேலும் அனைத்து அறிக்கைகளும் பெறப்பட்டவுடன் ஒரே தடவையில் காணி சொத்து வகை புதுப்பிக்கப்பட்டவுடன் இந்த மீதிகள் சீராக்கப்படும்.	ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காணிகளின் சரியான மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

	1,401,000 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.		
(உ)	2017 முதல் 2020 வரை அமைச்சின் மானியங்களால் நிர்மாணிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை ரேகாவா ''கிராப் சிட்டி'' குஞ்சு பொரிக்கும் தொழிற்சாலைக்கான ரூபா 221,719,566 செலவு, நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் பிற்போடப்பட்ட வருமானத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் அப் பெறுமதி பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு, குத்தகை தற்காலிக வருமானக் கணக்காக நடைமுறையற்ற பொறுப்புகளின் கீழ் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அக் கணக்குகளைச் சீராக்குவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இச் செயற்திட்டம் ஒரு முத்தரப்பு உடன்படிக்கையில் மேற்கொள்ளப் படும் செயற்திட்டமாகும். இந் நிர்மாணிப்புகள் திறைசேரி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் இச் செலவு ஆரம்பத்தில் பிற்போடப்பட்ட வருமானக் கணக்கின் மூலம் அதிகாரசபையின் சொத்தாகக் கணக்கிடப்பட்டிருந்தது. பின்னர் இச் சொத்துகள் முதலீட்டுச் சொத்தாக அடையாளம் காணப்பட்டு அவை தற்காலிக குத்தகைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்தச் செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படும் குத்தகைத் தவணைப் பணம் அதிகாரசபை வருமானமாகக் கணக்கிட முடியுமா எனும் சிக்கல் குறித்து கணக்கீட்டைத் திருத்துவது இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	முதலீட்டு சொத்துக்களை முறையாக அடையாளம் கண்டு கணக்கிட வேண்டும்.
(ஊ)	2024 திசெம்பர் 02 இல் உள்ளவாறு, ரேகாவா நண்டு திட்டம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட தனியார் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,440,769 ஆன குத்தகைத் தொகை, பெறவேண்டிய குத்தகை வருமானமாக கணக்கிடப்படவில்லை. ஆகையால் நடைமுறைச் சொத்துக்களும் வருமானமும் அத் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.	இவ் அறவீடுகள் அதிகாரசபையின் வருமானமாக நிச்சயமாக இனங்காணப்படுவதற்கு எழுந்த பிரச்சினை காரணமாக இந்தத் தொகை பெறத்தக்க வருமானமாக அங்கீகரிக்கப்படவில்லை. இருப்பினும், இந்தப் பிரச்சினை 2025 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டு கணக்கீட்டுப் பதிவுகள் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	குத்தகை வருமானத்தை சரியாகக் கணக்கிட வேண்டும்.
(எ)	காலாவதியான ஒப்பந்தங்களில் தக்கவைக்கப்பட்ட ரூபா 10,321,732 தொகை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக அதிகாரசபையின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் அப் பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் இதைச் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	ஒப்பந்தங்களில் தக்கவைக்கப்பட்ட தொகை சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.

(ஏ)	மீளாய்வாண்டில் மீன் குஞ்சுகளை சேமித்து வைப்பதற்காக ஏற்பட்ட செலவு ரூபா 99,844,016 ஆன போதிலும், மீளாய்வாண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் மீன் குஞ்சுகளை சேமித்து வைப்பதற்காக ரூபா 200,000,000 எனக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான வெளிப்பாய்ச்சல் ரூபா 100,155,984 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	ரூபா 200 மில்லியன் தொகை மூலதன ஒதுக்கீடுகளாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மூலதன ஒதுக்கீடுகளினூடாக மூலதனம் அல்லது முதலீட்டு வகையான செலவுகளே உருவாகின்றன. மேலும், செலவுகள் கணக்கிடப்படும் செலவின விடயத்தின் படி காசுப் பாய்ச்சல் கூற்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் படி, மூலதனச் செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 200 மில்லியன் தொகையிலிருந்து செலவு செய்யப்பட்டதால், அது ஒரு முதலீட்டு மூலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.	காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் சரியாக இனங்காணப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும்.
(ஐ)	அரச தனியார் கூட்டாண்மை ஒப்பந்தங்களின் கீழ் மீளாய்வாண்டின் போது குத்தகையாகப் பெறப்பட்ட ரூபா 16,372,269, மீளாய்வாண்டின காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான பெறுவனவின் கீழ் காண்பிக்கப் பட்டிராததன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் குறித்த தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஒப்புக்கொள்ளப்பட்டது. 2025 ஆம் ஆண்டுக் கணக்குகளில் இதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	குத்தகை வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

	விடயம்	தொகை	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
		ரூபா			
(அ)	நடைமுறையல்லாத பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 54,040,042 அரச மானியங்கள் (செயற் திட்டங்கள்) பல ஆண்டுகளாக முறையாகக் கணக்கிடப்படாமல் முன் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் குறித்த மீதியின் நிலைப்பாட்டையும் சரியான தன்மையையும் உறுதிப் படுத்துவதற்கு உரிய	54,040,042	மீதியை உறுதிப்படுத்துவதற்கு உரிய பட்டோலைகள்	இம் மீதி 2010 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே நிலவிவருவதுடன் குறிப்பிட்ட தகவல்களைக் கண்டுபிடிக்க முடியாமையால் அவற்றைச் சரிசெய்வதற்குச் சிரமமாக உள்ளது.	அரச மானியங்களை சரியாகக் கணக்கிட வேண்டியதுடன் மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

	எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.				
(ஆ)	ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழான திரண்ட செலவினத்தில் ரூபா 413,340 ஆன இனங்காணப்படாத மீதி காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் நிலைப்பாடு மற்றும் துல்லியத்தன்மை குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை.	413,340	நூட்குறிப்புப் பதிவுகளும் உறுதிப்படுத்தல் ஆவணங்களும்	கணக்குகள் மாற்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாலேயே திரண்ட கணக்கில் அடையாளம் காண முடியாத நிலையில் உள்ள இம் மீதிகள் காணப்படுகின்றன. இது ஏதேனும் முன்னைய ஆண்டில் நடந்த பரிவர்த்தனைகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட மீதிகள் என்பதால், 2025 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டு சீராக்கமாக சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் ரூபா 30,249,085 ஆன கடன்கொடுத்தோர் மீதியும் ரூபா 33,575,680 ஆன விவசாய நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் 74 கடன் பட்டோர் மீதிகளும் உறுதிப்படுத்தப்படுவதற்காக மூல ஆவணங்கள், மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் போன்ற ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக அவற்றின் நிலைப்பாடு மற்றும் துல்லியத் தன்மை கணக்காய்விற்கு உறுதிப் படுத்தப்பட்டிருக்கவில்லை.	30,249,085 33,575,680	மீதிகளை உறுதிப்படுத்தும் மூல ஆவணங்கள்	ரூபா 33,575,680.00 கடன்பட்டோர் மீதிகள் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் அறவிடப்பட வேண்டிய தொகையாகும். அந்தப் பணத்தின் அறவீடு மீளாய்வாண்டின் இறுதியளவில் நடந்ததுடன் 2025 ஆம் ஆண்டில் உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், 2025 ஆம் ஆண்டில் கடன்பட்டோர் மீதிகளுக்காகவும் உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பிவைப்பதற்கான	மூல ஆவணங்கள், மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் போன்ற ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

				நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஈ)	அதிகாரசபையால் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிராமையால் ரூபா 2,703,182,770 பெறுமதியான ஆதனங்கள், இயந்திர, உபகரணங்கள் மற்றும் ரூபா 854,727,329 பெறுமதியான குஞ்சு பொரிப்பக மீதியின் பெறுமதியின் நிலைப்பாடு மற்றும் துல்லியத் தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.	2,703,182,770 854,727,329	நிலையான சொத்துக்கள் பதிவேடு, மதிப்பீட்டு அறிக்கை	ஒவ்வொரு சொத்து வகுப்பையும் மதிப்பிடுவதன் மூலம் துல்லியமான நிலையான சொத்து பதிவேட்டைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்பட உள்ளது.	ஒரு முறையான நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.
(உ)	திவி நெகும உடன்படிக்கை என்ற பெயரில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 74,981,435 தொகையான செலவு மீதி காண்பிக்கப் பட்டிருந்ததுடன் குறித்த மீதியின் துல்லியத்தை உறுதிப்படுத்துவதற்கு உரிய எந்தவித ஆதாரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை.	74,981,435	மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள், பட்டோலைகள்	இம் மீதிகளில் ரூபா 53 மில்லியன் நீர்வாழ் உயிரினங்களை மேம்படுத்துவதற்காக கடன் அடிப்படையில் மீன் விரல்களை வழங்குவதற்குப் பயன்படுத்துவதற்கு திறைசேரியின் உடன் பாடு பெறப்பட்டது. அதன்படி, பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, இந்த மீதி கடன் அடிப்படையில் மீன் விரல்களை வழங்குவதற்கான நிதியாகப் பராமரிப்பதற்கும், அனைத்து நிதிகளையும் ஒரே வங்கிக் கணக்கின் கீழ் தனித்தனி செலவினத் தலைப்புகளாகப் பராமரிக்கவும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. அதன்படி, திவி நெகுமவாகப் பயன்படுத்தப்படும் இந்த நிதி மீன்	மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

				விதைகளை வைப்பதற்கான பொதுவான நிதியாக மாற்றப்பட உள்ளது.	
(ஊ)	அதிகாரசபையின் தலைமை அலுவலகம் உட்பட 21 மையங்களில், 05 மையங்களில் மட்டுமே இருப்புக் கணிப்பீடுகள் நடத்தப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இறுதி இருப்பும் அந்த மையங்களால் சமர்ப்பிக்கப்பட்ட இருப்பு அறிக்கைகளுக்கும் இடையே ரூபா 2,354,710 வேறுபாடு அவதானிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 105,258,129 ஆன இருப்பு மீதியின் துல்லியத்தை சரிபார்க்க முடியவில்லை.	105,258,129	இருப்புக் கணிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் இருப்புப் பட்டோலைகள்	பெப்ரவரி 28 ஆம் திகதியளவில் இறுதிக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமையால், இருப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட தகவல்கள் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டன. 21 மையங்களில் இருப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்படுவதற்காக போதுமான ஊழியர்கள் நிதிப் பிரிவின் இன்மையால், 05 மையங்களின் இருப்புக் கணிப்பீடு 2025 பெப்ரவரி 05 அன்றே நிறைவடைந்திருந்தது.	நிதிக்கூற்றுக்களில் சரியான இருப்பு மீதி கணக்கிடப்பட வேண்டும்.

.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
	2024 திசெம்பர் 31இல் உள்ளவாறான 84 கடன்பட்டோர்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 23,557,079 தொகையில் 1 முதல் 3 ஆண்டுகளுக்கு இடையே ரூபா 17,471,907 தொகையும் 3 முதல் 5 ஆண்டுகளுக்கு இடையே ரூபா 664,683 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5,420,489 தொகையான மீதியும் காணப்பட்டது. இம் மீதிகளை அறவிட்டுக்கொள்வதற்கு அதிகாரசபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது வரையில் கடன் அடிப்படையில் மீன் விதைகள் அரசு நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்ததுடன் மீன் விதை கடன்களை அறவிட்டுக்கொள்வதற்காக ஓர் குழு நியமிக்கப்பட்டு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மீன் விதை கடன்களை வழங்குவதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு, அதை மேலும் முறைப்படுத்தவும் ஒரு உள்ளகச் சுற்றறிக்கையை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கடன் மீதிகளை அறவிடுவதற்கு அதிகாரசபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திவி நெகும	திவி நெகும செயற்திட்டத்தின் கீழ் வெளி தரப்பினருக்கு வழங்கப்பட்ட	நிலுவையில் உள்ள கடன் நிலுவைத் தொகையை

	செயற்திட்டத்தின் கீழ் அறவிடப்பட வேண்டியிருந்த வெளி தரப்பினருக்கு வழங்கப்பட்ட ரூபா 3,162,500 கடன் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு அதிகாரசபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ரூபா 3,162,500 கடன் தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்தக் கடனை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்வளர்ப்பு விரிவாக்க அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	அறவிடுவதற்கு அதிகாரசபை முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	அதிகாரசபையால் மீன் வளர்ப்பு மையங்களை குத்தகை அடிப்படையில் வழங்கிய 06 தனியார் நிறுவனங்களிடமிருந்து 2023 ஆம் 2024 ஆம் ஆண்டுகளுக்காக 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 23,184,119 தொகை அறுவிடப்படுவதற்கு நிலுவையில் இருந்தது, மேலும் இதுவரை குத்தகைப் பணத்தை அறுவிடுவதற்கு அதிகாரசபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந் நிலுவைத் தொகையை செலுத்துமாறு கோரி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.	பணத்தை அறவிடுவதற்கு அதிகாரசபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			

(i)	நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105	05 கட்டுமான ஒப்பந்தங்கள் மற்றும் மீன் தீனிக் கொள்வனவால் அதிகாரசபைக்கு ரூபா 119,966,304 தொகை இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொறுப்பான அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டு நிதிப்பிரமாணத்தின் படி விசாரணைகள் நடத்தப்பட்டு குறித்த நட்டங்களும் இழப்பு களும் சம்பந்தப் பட்ட தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை .	முருதவெல மீன்வளர்ப்பு அபிவிருத்தி மையத்தின் மீளமைப்புப் பணிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் படி விசாரணை நடத்தப்பட்டு பொறுப்பான அதிகாரிகள் இனங்காணப் பட்டுள்ளதுடன், தொடர்புடைய முறையான விசாரணை தற்போது நடத்தப்பட்டு வருகிறது. மீன் தீனி கொள்வனவு நடைமுறை தொடர்பாகவும் நிதிப்பிரமாணம் 104 இன் படி விசாரணை நடத்தப்பட்டு ஓர் அறிக்கையை வழங்குவதற் காக சுயாதீன விசாரணை யாளருக்கு வழங்கப் பட்டுள்ளது. மேலும் செவனப்பிட்டிய அலங்கார மீன் குஞ்சு பொரிக்கும் கூடத்திற்கான நிர்மாணிப்பு ஒப்பந்தமும் வெலிகந்த மீன் குஞ்சு பொரிக்கும் கூடத்திற்கான நிர்மாணிப்பு ஒப்பந்தமும் தொடர்பாக ஒரு சுயாதீனமான, விடயம் தொடர்பான ஓர் நிபுணரால் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. முருதவெல மீன்வளர்ப்பு மையத்தின் மீதிப் பணிகளை முடிப்பதற்கான ஒப்பந்தம் தொடர்பாக அனைத்து பிணைகளும் பணமாக்கப் பட்டுள்ளதுடன் தற்போது நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதால், அதன் தீரப்பின்படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றேன்.	நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 137 (2)	தரமற்ற நிலையில் விநியோகிக்கப்பட்ட மீன் தீனிக்காக மீளாய்வாண்டில், நிதிப்பிரமாணத்திற்கு முரணாக ரூபா 18,888,505 குறித்த வழங்குன ருக்கு செலுத்தப் பட்டடிருந்தது.	வழங்குனருக்கு வழங்கிய மீன் தீனியில் புரதம் மற்றும் இலிப்பிட் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சதவீதம் குறிப்பிடத்தக்க நிலையில் இருப்பதாக NARA ஆய்வறிக்கைகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன. குறித்த ஆய்வறிக்கைகளின் படி, புரதத் தேவைகளைப் பூர்த்தி செய்த 46,070 கிகி CF-00, CF-01, TF-00, TF-01 மற்றும் TF-03 வகையான மீன் தீனிக்காக நியமிக்கப்பட்ட விசேட குழு பரிந்துரை வழங்கியிருந்தது.	நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

			குறித்த குழுவின் பரிந்துரைக்கு முகாமைத் துவத்தின் பரிந்துரையும் அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளதுடன் அப் பரிந்துரைகள் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	
(iii)	நிதிப்பிரமாணம் 396 (ஈ)	2025 மார்ச் 31 இல் உள்ளவாறு, 2 வங்கிக் கணக்குகள் தொடர்பான மொத்தம் ரூபா 1,180,586 பெறுமதியான கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள 73 காசோலை கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	2025 மார்ச் மாதத்தில், இலங்கை வங்கியில் உள்ள 003270048 கணக்கு இலக்கத்தில் கொடுப்பனவிற் காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலை களின் பெறுமதி யில் ரூபா 2,300,000 பெறுமதியான காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இங்கு மீதமாக உள்ள சிறிய காசோலைகளும் மக்கள் வங்கிக் கணக்கு இல. 208100483320761 இல் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக் கப்பட்டிராத காசோலை களும் இரத்துச் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	1994 ஏப்ரல் 20 இன் அரச கணக்கு சுற்றறிக்கை 30/94 (4.4)	அரச கூட்டுத்தாபனங் களால் பயன்படுத்தப்படும் வெளிநாட்டு மானியங்கள் தொடர்பாக செலவின மதிப்பீட்டிற்கு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு வரிசை அமைச்சி னூடாக நிறுவனத்திற்கு வெளிநாட்டு மானியங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் அதிகார சபைக்குப் பெறப்பட்ட ரூபா 65,768,991 வெளிநாட்டு மானியங் கள் தொடர்பாக குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இச் செயற்திட்டம் வெளிவிவகாரத் திணைக் களத்தால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டம் என்பதால் இதற்காக எமது அதிகாரசபை க்குப் பெறவேண்டிய ஒதுக்கீடுகள் நேரடியாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் எமது அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.	வெளிநாட்டு மானியங்கள் தொடர்பாக அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2011 ஏப்ரல் 21 ஆம் திகதிய MOEF/ERD/2011/01 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2014 ஜூன் 26 ஆம் திகதிய	வெளிநாட்டு மானியங்களை வழங்குதல் மற்றும் உடன்படிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அறிவித்து திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள	வயம்ப பல்கலைக்கழகம், உருகுணைப் பல்கலைக் கழகம் மற்றும் இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஒருங்கிணைப்புடன் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் ஜேம்ஸ் குக் பல்கலைக்கழகத்தின் உதவி யுடன் இலங்கையின் 10	வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான கணக்குகளைப் பராமரிக்கும் போது வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் சுற்றறிக்கையைப் பின்பற்ற வேண்டும்.

	MOEF/ERD/2014/01 ஆம் இலக்க சுற்றறிக்கை	வேண்டிய போதிலும் அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 65,768,991 ஆன வெளிநாட்டு மானியங்கள் தொடர்பாக அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மாவட்டங்களில் தேர்ந்தெடுக் கப்பட்ட 48 தொட்டிகளில் ACIAR செயற்திட்டம் ஒரு அறிவியல் ஆராய்ச்சி திட்டமாக செயல்படுத்தப் படுகிறது. இலங்கையில் உள்ள நன்னீர் நீர்த்தேக்கங்களில் நன்னீர் இறால்களின் அதிக உற்பத்தித்திறனை அடைவதே இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.	
(உ)	ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை இல. PS/APL/ Circular/02/2024 சுற்றறிக்கை	விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வழங்கப் பட்ட ரூபா 34,650,000 கடன்கள் தொடர்பாக பிராந்திய மற்றும் மாவட்ட மட்டங்களில் இரு வாரங்களுக்கு ஒருமுறை செயற்திட்ட மீளாய்வை மேற்கொள்ளவேண்டிய போதிலும் 2025 மார்ச் 21இல் உள்ளவாறு 74 பயனாளிகளில் 33 பேருக்கு மட்டுமே அத்தகைய மீளாய் வொன்று நடத்தப்பட்டது.	அதிகாரிகள் பற்றாக்குறை காரணமாக, இந்த நடவடிக்கை மாதத்திற்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.	ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 153,418,122 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 376,846,864 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 223,428,742 தொகையான பற்றாக்குறையின் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இப் பற்றாக்குறை வீழ்ச்சிக்கு ரூபா 33,838,487 ஆன மொத்த இலாபம் அதிகரிப்பு, மீன் விதை வருமானம் ரூபா 18,500,477 ஆல் அதிகரித்தமை, அரசாங்கத்தின் மீண்டெழும் மானியங்கள் ரூபா 63,943,298 ஆலும் மூலதன மானியங்கள் ரூபா 111,130,025 ஆலும் அதிகரித்தமை மற்றும் விற்பனை கிரயம் ரூபா 15,338,011 ஆல் குறைவடைந்தமையும் விநியோக செலவுகள் ரூபா 39,519,367 ஆல் குறைவடைந்தமையும் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள இறால் குஞ்சு பொரிக்கும் நிலையம், 2021 திசெம்பர் 02 ஆம் திகதி முதல் 05 ஆண்டுகளுக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது, மேலும் இந்த குத்தகை காலம் முடிவடைவதற்கு	2023 செப்தெம்பர் 01 முதல் 2024 ஜூன் 30 வரை செலுத்த வேண்டிய ரூபா 5,885,000 தொகையைச் செலுத்துமாறு அறிவித்து குறித்த நிறுவனத்திற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. அதன் படி,	நிலுவையில் உள்ள குத்தகைத் தொகையை அறவிடுவதற்கு அதிகாரசபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	முன்பு 2024 ஜூலை 01 அன்று குறித்த உடன்படிக்கை முடிவுக்கு வந்தது. உடன்படிக்கையின் 21 ஆவது நிபந்தனையின் படி, உடன்படிக்கை குறித்த காலத்திற்கு முன் நிறுத்தப்பட்டால், அதிகாரசபைக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்காக வருடாந்த குத்தகைத் தொகையில் 50 சதவீதத்திற்கு சமமான அதாவது ரூபா 3,000,000 செயற்திறன் பிணைப் பத்திரம், பெறப்பட வேண்டிய போதிலும் அத்தகைய செயல்திறன் பிணைப் பத்திரம் எதுவும் பெறப்பட்டிருக்க வில்லை. குறித்த நிறுவனத்தால் அதிகாரசபை அதிகாரிகளிடமிருந்து குஞ்சு பொரிக்கும் நிலையமும் பதிவுப் பொருட்களும் மீளப் பெறப்பட்டிருந்தது. எனினும் அதிகாரசபையால் அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை தவணைகளில் ரூபா 5,885,000 நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த நிறுவனத்தின் முகாமைத்துவத்துடன் குத்தகைத் தொகையை அறவிடுவதற்காக ஓர் கலந்துரையாடல் 2025 மார்ச் 21 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதன் படி, குத்தகைத் தொகை அறவிடப்பட உள்ளது.	
(ஆ)	2022 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,540,507 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இரத்து செய்யப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் படி விசாரணை நடத்தப்பட்டுள்ளது. .	ஒப்பந்தம் தொடர்பாக அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	வெலிகந்த மற்றும் செவனப்பிட்டி மீன் குஞ்சு பொரிக்கும் நிலையங்களின் நிர்மாண ஒப்பந்தம் தோல்வி அடைந்ததை அடுத்து நீண்ட கால நீடிப்பு வழங்கப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்டது. மத்தியஸ்தம் மற்றும் நடுவர் மன்றத்திற்கு நியாயமான காரணங்களை முன்வைத்து நிறுவனத்திற்கு சாதகமான முடிவுகளைப் பெறத் தவறியதால், அறவிடப்பட்ட தாமதக் கட்டணத்தை மீளச் செலுத்துதல், அதற்கான வட்டி மற்றும் ஒப்பந்தக்காரருக்கு	மத்தியஸ்தத்தைப் பார்க்கிலும் சாதகமான தீர்வைப் பெறுவதற்காக நடுவர் மன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் இதன் மூலம் அதிகாரசபைக்கு இலாபம் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி, செலுத்த வேண்டிய contractual liabilities ஒப்பந்தப் பொறுப்புகளைத் தவிர, வேறு எந்த மேலதிக தொகையும் செலுத்தப்படவில்லை. இந்த ஒப்பந்தம் தொடர்பான	அதிகாரசபைக்குக் கிடைக்காது போன பணத்தை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	வருமானம் கிடைக்கத் தவறியமை தொடர்பாக, ரூபா 55,388,945 அதிகாரசபையால் ஒப்பந்ததார ருக்குச் செலுத்த வேண்டியிருந்தது. இந்தத் தொகைக்கு மேலதிகமாக, ரூபா 14,363,745 ஆன செயற்திறன் பிணைப் பத்திரமும் குறித்த காலப்பகுதியல் பணமாக்கப்பட்டிராமையால் அதிகாரசபைக்கு ரூபா 69,752,690 மொத்த இழப்பு ஏற்பட்டிருந்தது.	செயற்திறன் பிணையின் செல்லுபடிக் காலத்திற்குள் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், பணம் வழங்கப்படாது மறுக்கப்பட்டிருந்தது.	
(ஈ)	ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், உவர் நீர் இறால் வளர்ப்பிற்காக ஒரு தனியார் முதலீட்டு நிறுவனமும் நண்டு வளர்ப்பு மீன்வளர்ப்பு அமைப்பும் அதிகாரசபையுடன் 2021 திசெம்பர் 02 ஆம் திகதி ஓர் முத்தரப்பு குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித் திருந்தன. அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இச் செயற்திட்டத்திற்காக ரூபா 221,719,566 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், உடன்படிக்கையின் 10 ஆம் நிபந்தனையின் படி, தனியார் முதலீட்டு நிறுவனங்களிடமிருந்து ரூபா 193,460,000 மாத்திரமே 30 ஆண்டுகளின் போது குத்தகையாக அதிகாரசபை பெறுவதனால் ஆகக் குறைந்த பட்சம் அதிகாரசபையால் ஏற்கப்படும் செலவுகளையேனும் தீர்க்க இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	தென் மாகாண முதலீட்டாளர்களுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த மாதிரி மீன்வளர்ப்பு (இறால்) முன்னோடிச் செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டம் இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட அடித்தள வசதியாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைகளின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட எமது நீர் சுத்திகரிப்பு அலகிற்காக மேற்கொள்ளப்பட்ட அரச முதலீடு ரூபா 28,259,566 ஆகும்.	சட்டத்தால் அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பணிகளின் படி செயற்பட வேண்டும்.
(உ)	குத்தகைப் பணமாக எதிர்வரும் 30 ஆண்டுகளுக்கு முதலீட்டு நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் ரூபா 193,460,000 தொகையான பணத்தின் தேறிய தற்போதைய பெறுமதி ரூபா 69,120,470 என்பதால், செயற்திட்டத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ரூபா 124,339,530 ஆன நிதி இழப்பு ஏற்படும் என	முன்னோடிச் செயற்திட்டமாக முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக, இச் செயற்திட்டத்தின் குளங்கள் மற்றும் தொடர்புடைய நிர்மாணிப்புகளுக்காகச் செலவிடப்பட்ட பணத்தை சலுகை அடிப்படையில் அறவிடுவதற்கு அமைச்சின் பெறுகைக் குழுவிலும் உடன்படிக்கை உடன்பாட்டுக்	அரச - தனியார் குத்தகை உடன்படிக்கைகளின் கீழ் உடன்படிக்கையிடப்படுகையில் அதிகாரசபைக்கு நட்டம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அவதானிக்கப்பட்டுள்ளது. (கழிவு விகிதம் = கடந்த 10 ஆண்டுகளின் (2012-2021) திறைசேரியின் உண்டியல் விகிதத்தின் சராசரி மதிப்பு - 8.53% - மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டு அறிக்கை 2021) மேலும், மேலே (i) இலான அவதானிப்பில் உள்ள ரூபா 28,259,566 நிதி இழப்புடன், ஒட்டுமொத்த நிதி இழப்பு ரூபா 152,599,096 அதிகாரசபைக்கு ஏற்க நேர்ந்துள்ளது.	குழுவிலும் கொள்கை ரீதியாக தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, முப்பது ஆண்டுகளுக்கு முதலீட்டாளரிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	
(ஊ)	2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச் சட்டம்) பிரிவு 5.4(எ) இன் படி, நீர்வாழ் வளங்களின் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், விற்பனையாளர், வழங்குனர் மற்றும் விநியோகஸ்தர் என விற்பனை செய்வது அதிகாரசபையின் செயற்பாடானதுடன் இதன் படி, செயற்படாது மேற்குறித்த வகையில் அதிகாரசபைக்கு நிதி நட்டம் ஏற்படும் வகையிலும் பாரிய தனியார் நிறுவனத்திற்கு இலாபம் ஏற்படும் வகையில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டமையால் சட்டத்தின் மூலம் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட செயல்பாடுகளும் கடமைகளும் வெளித் தரப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது மேலும் அவதானிக்கப் பட்டது.	சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கும், நீர்வாழ் வள இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், வழங்குனர், விநியோகஸ்தர் மற்றும் விற்பனையாளராக நீர்வள அபிவிருத்தியை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு உதவுவதற்கான செயற்பாட்டை நிறைவேற்று வதற்காக இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது.	2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை திருத்தச் சட்டத்தின் 5.4(எ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், விற்பனையாளர், வழங்குனர் மற்றும் விநியோகஸ்தர் என விற்பனையை மேற்கொள்வது போன்ற அதிகாரசபையின் செயல்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	அதிகாரசபைக்கு சொந்தமற்ற 1361.76 ஹெக்டேர் பரப்பளவான 04 காணிகளுக்கும், பரப்பளவு அறியப்படாத ஒரு காணிக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 107.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், இதுவரை எந்த செயற்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டிராமையால் குறித்த செலவு விளைவற்ற	இக் காணிகளை விடுவிப்பதற்கு நடைமுறை யில் நீண்ட காலம் எடுத்ததன் காரணமாக இச் செயற்திட்டங்களை ஆரம்பிப் பதில் ஏற்பட்ட தாமதத்திற்கு முக்கிய காரணமாகியது. இந்த ஆண்டு கல்முல்ல செயற்திட்டம் ஆரம்பிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் ஏனைய செயற்திட்டங்களும்	காணிப் பிணக்குகளைத் தீர்த்து இச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	செலவினமாகியிருந்தது.	விரைவில் ஆரம்பிக்கப் படுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளமையால் இச் செயற்திட்டங்களுக்கு செலவிடப்பட்ட ரூபா 107.6 மில்லியன் பணம் விளைவற்ற செலவினமல்லாது, குறித்த செயற்திட்டங்களுக்கான முன் தயார்படுத்தலுக்காக மேற் கொள்ளப்பட்ட முதலீடாகும்.	

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	அதிகாரசபைக்கு சொந்தமில்லாத காணிகளில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக சிறிய அளவிலான மீன் விதை அலகுகளை நிர்மாணிப்பதற்காக 2021 முதல் 2023 வரை ரூபா 62,719,414 செலுத்தப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் இதுவரை அதிகாரசபைக்கு அதிலிருந்து எந்த நன்மையும் கிடைத்திருக்க வில்லை.	காணிகளின் உரிமையைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் சட்டப் பிரிவால் எடுக்கப்பட்டு வருகின்றன. மீன் விரல்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் மேம்படுத்தப்பட்ட இந்த மீன் விதை உற்பத்தி அலகில் இருந்து இதுவரை மீன் விரல்களை உற்பத்தி செய்து நீர்த்தேக்கங்களில் இடுவதற்கு ஆரம்பிக்கப் பட்டுள்ளன.	அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியங்கள் வருமானத்தை ஈட்டும் வகையில் முதலீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	உடவளவே கெண்டை வளர்ப்பு மையத்தில், 31,764 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட 37 தொட்டிகள் நீர் பற்றாக்குறை மற்றும் தொட்டிகளில் பாரிய அளவிலான நீர் கசிவு காரணமாக பயனற்றுக் காணப்பட்டன. இது மொத்த தொட்டி அளவில் 46 சதவீத அளவிலான உயர் சதவீதத்தைக் கொண்டிருந்தது. இத்தகைய விளைவற்றுக் காணப்பட்ட தொட்டிகளில், R- வகையிலான 08 தொட்டிகளும் C-வகையிலான 06 தொட்டிகளும் அடையாளம் காண முடியாத அளவில் பற்றை வளர்ந்து அத் தொட்டிகளின் அருகில் செல்வதற்கேனும் இயலாத நிலையில் இருந்தமை 2025 ஆகஸ்ட் 11 அன்று மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும்,	இந்த தொட்டிகள் 1994 ஆம் ஆண்டு மீண்டும் மீன்வளர்ப்பு அபிவிருத்தி மையங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் இந் நிலையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் இருந்தன. இந்த தொட்டி ஒன்றை திருத்துவதற்கு ரூபா 15 மில்லியன் அளவில் அளவில் செலவாவதுடன் அனைத்து ஊ – தொட்டிகளுக்காக ரூபா 90 மில்லியன் அளவில் செலவாகும். உடவளவை மையத்தில் கிடைக்கப்பெறும் நீர் வழங்கல் பிரச்சினைகள் காரணமாக போதுமான நீர் வழங்கல் இன்மையால், இந்தளவிலான தொகையைச் செலவிட்டு பழுதுபார்ப்பு வேலைகளை மேற்கொண்டாலும் பயன்படுத்தக்கூடிய காலம் ஒரு வருடத்திற்கு சுமார் 04 மாதங்கள் அளவு மாத்திரமேயாகும். எனவே, இத் தொட்டிகளைப் பழுதுபார்ப்பதில் கவனம் செலுத்தப்படவில்லை.	மீன் தொட்டிகளை அதிகபட்ச செயல்திறனுடன் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	14,800 சதுர மீட்டர் பரப்பளவான 16 மீன் தொட்டிகளில் சிறிய அளவிலான நீர் கசிவு இருந்ததுடன் குறித்த சிறிய நீர் கசிவுகள் திருத்தப்படாமல் பயன்படுத்தப்பட்டிருந்தன.		
(இ)	உடவலவே கெண்டை வளர்ப்பு மையத்தில் உள்ள 05 R-வகை தொட்டிகளின் நீர் கசிவைத் தடுப்பதற்காக க்க ''ஜியோமெம்பிரேன்'' முறைமையைப் பயன்படுத்தி பழுதுபார்ப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு அதிகாரசபை யால் ரூபா 6,517,156 செலவிடப் பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2025 ஆகஸ்ட் 11 ஆம் திகதி வரையிலும் ''ஜியோமெம்பிரேன்'' முறையில் திருத்தப்பட்ட 5 தொட்டிகளிலும் நீர் கசிவு அவதானிக்கப் பட்டதுடன் இவற்றில் 2 தொட்டிகள் பயன்படுத்த முடியாத அளவில் நீர் கசிவு உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இதன் படி, அச் செயற்பாடு பயனற்ற பணியாக மாறியதுடன் செலவிடப்பட்ட அத் தொகையும் விளைவற்ற செலவினமாகியிருந்தது.	''ஜியோமெம்பிரேன்'' முறை பயன்படுத்தப்பட்ட தொட்டிகளில் நீர் அற்ற காலங்களில் நீராவியால் ஏற்படும் அழுத்தம் காரணமாக நீர் கசியத் தொடங்கியுள்ளது. மேலும் நீர் விநியோகம் மீட்டெடுக்கப்பட்ட பின்னர் 2026 ஆம் ஆண்டு முதல் இந்த தொட்டிகளைத் திருத்தி பயன்படுத்தப்படுவதற்குள்ளது.	மீன் தொட்டி பழுதுபார்க்கும் பணிகள் முறைப்படி மேற்கொள்ளப்பட்டு உச்ச அளவு செயல்திறனுடன் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	உடவலவே கெண்டை வளர்ப்பு மையத்தில் உள்ள மீன் குஞ்சு பொரிக்கும் நிலையங்களில் ஒன்றான சீன மீன் குஞ்சு பொரிக்கும் நிலையம் ரூபா 7,500,219 செலவில் திருத்தப்பட்டிருந்தது. குறித்த பணி சாதகமான முறையில் பூர்த்தி செய்யப்பட்டதாக அதிகாரசபையின் பொறியாளரால் உறுதிப்படுத்தப்பட்டு 2024 மார்ச் 11 அன்று ஒப்பந்ததாரர் நிறுவனத்திடமிருந்து பொறுப்பேற்கப்பட்டிருந்தது. குறித்த பணி வெற்றிகரமாக	சீன மீன் குஞ்சு பொரிப்பகம் முதற்தடைவ திருத்தப்பட்டதன் பின்னர் 2025.06.15 வரை தற்காலிகப் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் இதனை அடுத்து 2025.06.20 ஆம் திகதி மேலுமோர் திருத்தவேலைக்கான பணியைப் பொறுப்பேற்ற ஒப்பந்ததாரரின் உபகரணங்கள் மையத்தில் உள்ளன. குறித்த ஒப்பந்தம் இதுவரையிலும் பூர்த்திசெய்யப்படவில்லை.	மீன் குஞ்சு பொரிப்பகத்தின் திருத்த வேலைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு அதிகபட்ச பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	நிறைவேற்றப்பட்டு கையப்படுத்தல் சான்றிதழ் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து 2025 ஆகஸ்ட் 30 திகதிக்கு ஏறத்தாழ ஒரு வருடமும் ஆறு மாதங்களும் கடந்திருந்த போதிலும் இந்த குஞ்சு பொரிப்பகம் பயன்படுத்தக்கூடிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. குறித்த ஒப்பந்த நிறுவனத்தின் கட்டுமான உபகரணங்கள் கூட அகற்றப்படாமல் பணித் தள வளாகத்தில் குவிந்திருந்தமை பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது.		

3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவ கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	திலாப்பியா மீன்களுக்குத் தேவையான தீனியை உற்பத்தி செய்வதற்காக 2019 அக்டோபர் 08 ஆம் திகதி உடவலவே மீன் தீனி உற்பத்தி மையத்தில் நிறுவப்பட்ட ரூபா 11,802,000 மதிப்புள்ள மீன் தீனி உற்பத்தி இயந்திரத்தினால் 2024 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் கணக்காய்வுத் திகதியான 2025 ஏப்ரல் 04 ஆம் திகதி வரையிலும் இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது.	புதிய தலைவர் இந்த விடயம் குறித்து ஆராய்ந்து இந்த அழைப்பை நிறுத்தி, மீன் தீனி உற்பத்தி அலகின் மூலம் மீண்டும் உணவு உற்பத்தியை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி அறிவுறுத்தியுள்ளார். அதன்படி, 2025 ஜனவரி மாதம் மீன் தீனி இயந்திர திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த பணிகள் நிறைவேற்றப்பட்டு ஆய்வு இயக்க நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன.	மீன் தீனி உற்பத்தி இயந்திரங்கள் உற்பத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	அதிகாரசபையால் மீன் வளர்ப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக 14 ஏக்கர் மற்றும் 137.0294 ஹெக்டேயர் அளவிலான 05 அரச காணிகளை ஒப்படைப்பதன் மூலம் பெறப்பட்டிருந்த போதிலும் இக் காணிகள் மீன் வளர்ப்பை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் இருந்தன.	மன்னார் மாவட்டத்தில் மீன்வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்ட வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான 137.0294 ஹெக்டேர் காணி, அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாண மாவட்டத்தில் கடற்பாசி திசு வளர்ப்பு மையத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட 02 ஏக்கர் காணி பிரதேச செயலாளரால் ஒப்படைக்கப்படவோ அல்லது கையகப்படுத்தும் செயல்முறை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில்	காணியை கையகப்படுத்தி பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		கடலட்டைகள் குஞ்சு பொரிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட 02 ஏக்கர் காணியை ஒதுக்குவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவந்த போதிலும், அதிகாரசபைக்கு எந்த ஒதுக்கீடும் அல்லது கையளிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில், கடலோர மீன்வளர்ப்பு பயிற்சி மையத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட 4.0469 ஹெக்டேர் காணி, அரசாங்கத்திடமிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட முடியாமையால் இச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தடைகள் ஏற்பட்டுள்ளமையால் வேறு நிதி மூலங்களில் இருந்து உதவி பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வவுனியா மீன்வளர்ப்பு விரிவாக்க அலுவலக காணி, வவுனியா மீன்வளர்ப்பு விரிவாக்க அலுவலகத்திற்காக ஒரு காணி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அது இதுவரையிலும் கையகப்படுத்தப்படவில்லை.	
(இ)	2022 மார்ச் 30 ஆம் திகதி நிர்மாணப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 17,041,113 பெறுமதியான தம்புள்ள மரபியல் பிரிவு ஆய்வகத்தின் கட்டிடங்கள் இது வரையிலும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.	மீன் மரபியல் பிரிவு ஆய்வகம் 2022 ஆம் ஆண்டில் நிர்மாணிப்புகள் பூர்த்தியடைந்த போதிலும் ஆய்வகத்தின் நிர்மாணப்புகளுக்கு இணையாக அறிவியல் உபகரணங்களின் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கீடுகள் போதியளவில் கிடைக்கப்பெற்றிராமையாலும் பெறுகை நடவடிக்கைகளுக்காக நீண்ட காலம் கடந்திருந்தமையாலும் குறித்த ஆண்டின் போது ஆய்வகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு தாமதமாகியிருந்தன.	ஆய்வச் செயற்பாடு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு செயற்பட வேண்டும்.
(ஈ)	தம்புள்ள மரபியல் ஆய்வகத்திற்காக அதிகாரசபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 6,308,429 பெறுமதியான 08 உபகரணங்கள் இதுவரை பயன்படுத்தப்படவில்லை.	ஆய்வகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களைத் தவிர, தொடர்புடைய ஆராய்ச்சி செயல்முறையை மேற்கொள்ளத் தேவையான ஏனைய	உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும்.

		உபகரணங்களை பூர்த்திசெய்ய முடியாமையால் இவ் 08 உபகரணங்களைப் பயன்படுத்த முடியவில்லை.	
(உ)	ஓர் ஆலோசனை நிறுவனத்திற்கு நீர்வாழ் பூங்காவை நிர்மாணிப்பதற் காக ஆலோசனை சேவைகள் முடிவுறாத நிலையில் 2016 ஆம் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 4,683,789 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டிலும் வேறோர் ஒப்பந்தத்திற்காக ரூபா 1,538,750 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகாதிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படாது கொடுப்பனவுகளும் பலனற்ற செலவினமாகியிருந்தன.	மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைபற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மான்கேணி அருகே ஒரு நீர்வாழ் பூங்காவை நிறுவுவதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், மன்னாரில் உள்ள வெடிதலத்தீவு மீன்வளர்ப்பு தொழிற்பேட்டையில் அடிப்படைத் திட்டங்களுக்காகவு ம் குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதற்காகவும் 2016-2017 ஆம் ஆண்டில் தொடர்புடைய ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா 4,683,789 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், மான்கேணி வடக்கு செயற்திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட 950 ஹெக்டேர்களில் 239 ஹெக்டேர்களை விடுவிக்க முடியும் என வனப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறித்த காணி விடுவிக்கப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவருகின்றன. கொக்கொடிச்சோலை செயற் திட்டத்திற்காக 154 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஒருங்கிணைப்புகள் வழங்கப் பட்டுள்ளதுடன் சுற்றுச்சூழல் மதிப்பீட்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.	தொடர்புடைய நிர்மாணிப்புப் பணிகளை விரைவாக பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

(க)	மீன் உற்பத்தியை மேம்படுத்தும் முதன்மை நோக்கத்துடன் ரூபா 894,766,888 செலவில் 5 மீன் குஞ்சு பொரிப்பகங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 முதல் 2024 ஆம் ஆண்டு வரை குறித்த 5 குஞ்சு பொரிப்பகங்களில் செவனப்பிட்டி மற்றும் மன்னார் ஆகிய இரு மையங்களில் இருந்து மாத்திரம் 6,257,241 மீன் குஞ்சுகள் விற்பனை செய்யப்பட்டு, ரூபா 8,481,123 வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, இதில் மன்னார் கடல் அட்டைக் குஞ்சு பொரிப்பகத்திற்கு ரூபா 25,000 மாத வாடகைக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் செவனப்பிட்டி அலங்கார மையம் மட்டுமே செயற்பட்டு வந்தது. மீதமுள்ள 03 மையங்கள் செயற்படு நிலையில் இருக்கவில்லை.	விசேட தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக குஞ்சு பொரிப்பகங்கள் நிர்மாணிக்கப் படுவதுடன் அவற்றின் நிதி மதிப்பீட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்வது நியாயமற்றதாகும். நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குஞ்சு பொரிப்பகமும் குறிப்பிட்ட நோக்கங்களை எய்தி வருவதுடன் பணியாளர்களை ஆட்சேர்ப்பதில் உள்ள சிக்கல் காரணமாக, இந்த அனைத்து குஞ்சு பொரிப்பகங்களிலும் எதிர்பார்த்த அளவில் இனப்பெருக்க நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள அதிகாரசபையால் முடியவில்லை. புதிய ஆட்சேர்ப்புகளுக்கு அனுமதி கிடைக்கப்பெற்றதும், குறித்த பணியாளர்களை நிரப்பி, வருடாந்த திட்டத்தின் படி உற்பத்தி திறனை பூர்த்தி செய்வதற்காக இந் நிலையம் இணைத்துக் கொள்ளப்படும்.	மீன் உற்பத்தி மையங்களின் நோக்கங்களை நோக்கி இயக்கப்பட வேண்டும்.